முருகப்பெருமான் துணை

**மகான் அங்காரக பகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.12.2023**, வெள்ளிக்கிழமை

1. மறைபோற்றும் மாதருமம் தன்னை
மண்ணுலகில் தயவாகச் செய்து
அறம் வளர்க்கும் ஞான குருவே
ஆறுமுக அரங்கனே உமை போற்றி
2. போற்றியே சோபகிருது தேள்திங்கள்
புகலுவேன் இருபானீர் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 22 ம் நாள், 08.12.2023, வெள்ளிக்கிழமை)
ஆற்றல்பட அறிவுரை ஆசிதனை
அங்காரக பகவானும் உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் படைகள்
உலகை வெல்லும் காக்கும்படி
அறம் போற்றி சேவை ஆற்றிவர
அரங்கமகான் ஆணைக்கு காத்து
4. காத்துமே தயவாக சேவையை
கண்ணியமாய் உலகில் செய்து
உத்தமர்களாக ஞானவான்களாக
உலகை காக்கும் தருமவான்களாக
5. ஆகவே சேவை ஆற்றி
அழியாமை எனும் வரத்தை
மகான் அரங்கன் துணைபட
மண்ணுலகில் முருகப்பெருமான் வழி
6. வழிதனில் அடைந்து வர
வருங்காலங்களில் இந்த எண்ணிக்கை
தெளிவுபட அளவிலாப் பெருகி
தேசமெங்கும் நிரம்பி இனிதே

7. இனிதே ஞானத்தலைமை தனை
இந்தப் புவிக்கு தந்தருளும்
கனிவேலவன் செம்படைகளாக
கருணைமிக்க ஆற்றல் மிகுந்த

8. ஆற்றல் மிகுந்த அரங்கமகான்
அருள்பலமிக்க படைகளாக
உற்றதொரு உருவெடுத்துமே
உலகமாற்றம் நிகழ்த்துவர்

9. நிகழ்த்தவே தமிழகம் தொட்டு
நீதி குன்றா ஆட்சி முறை
செகமே வியக்க உருவாக்கும்
சித்திமிகு ஞான ஆட்சிபடைப்பர்

10. படைக்கவே பாரதம் முழுக்க
பண்பான சமூகம் சூழலாகி
தடையான அஞ்ஞானம் ஒழிந்து
தரும ஞானமும் வலுவடைந்து

11. அடைந்துமே அரங்கமகானின்
அவதார நோக்கம் வழியே
நடைபோடும் உலகில் ஞான ஆட்சி
ஞானிகளின் ஆட்சிக் காலமுமாக
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–